# கடற்படைக் கப்பல் மீதான தாக்குதலில் ஆறு கடற்படையினர் பலி; எட்டுப்பேர் காயம்

(கொழும்பு)

பருத்தித்துறைக் கடலில் தரித்துநின்ற கப்பலின் மீது கரும்புலிகள் மேற்கொண்ட தாக்குதலினால் ஆறுகடற்படையினர் கொல்லப்பட்டதாகவும், மற்றும் எட்டுப்பேர் காயமடைந்துள்ளதாகவும் கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று முன்தினம் அதிகாலையில் கரும்புலிகள் வெடிமருந்து நிரம்பிய படகொன்றுடன் சென்று பாரிய சிறிலங்காக் கப்பல் ஒன்றுடன் மோதிய போதுதான் அரசபடைகள் தரப்பில் மேற்படி இழப்புக்கள் ஏற்பட்டன.

இச்சம்பவத்தில் கரும்புலிகள் கப்டன் ஜெயந்தனும், கப்டன் சிதம்பரமும் வீரமரணமடைந்தனர் என்பதும் தெரிந்ததே.

Registered as a News Paper in Sri Lanka. விலை ரூபா: 4-50

ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 சித்திரை 23 ( 06 - 05 - 1991 ) திங்கட்கிழமை ஓசை: 77

## குறுகியகால அறிவிப்பில் பரீட்சை நடைபெறும் - ஆதர் வெதமுல்ல

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணததில் இன்று முதல் இடைநிறுத்தம செய்யப்பட்ட க. பொ. த உயர்தர விசேடபரீட்சைகள் குறுகியகால அறிவித்தலில் விரைவில் நடைபெறும் என பரீட்சை ஆணையாளர் ஆதர் வெதமுல்ல தெரிவித்ததாக 'வீரகேசரி' குறிப்பிட்டுள்ளது. யாழ்ப்பாணம், கிளி (4 ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியா கோழியா குளத்தில் இருபத்திரெண்டுராணுவம்பலி; சடலங்கள், ஆயுதங்கள் மீட்பு

## விடுதலைப் புலிகள் தரப்பில் ஒருவர் வீரமரணம்

(வவுனியா)

வவுனியா கோழியா குளப்பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர்மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இருபத்திரெண்டிற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

பெருமளவு ஆயுதங்களும், பதினெட்டு இராணுவத்தினரின் சடலங்களும் விடுதலைப்புலிகளினால் கைப்பற்றப்பட்டன.

நேற்றுக்காலை பத்து மணிக்கு ஆரம்பமான இம்மோதல் நேற்று மாலைவரை தொடர்ந்து நடந்தவண்ணமிருந்தது. இம்மோதலில் விடுதலைப்புலிகள் தரபபில் ஒரு போராளி வீரமரணமடைந்தார்.

இந்த மோதல் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது: நேற்றுக்காலை பத்துமணியளவில் வவுனியா - கோழியா குளப் பகுதியில் நிலைகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினரைத் தேடிச்சென்று விடுதலைப் புலிகள் தாக்குதலைத் தொடுத்தனர். காலை ஆரம்பித்த இந்த மோதல் மாலைவரை தொடர்ந்து நடைபெற்றவண்ணம் இருந்தது.

மோதல் இடம்பெற்றுக் (4ஆம் பக்கம் பார்க்க)

## பதினெட்டுச் சடலங்கள் உட்பட பெருமளவு ஆயுதங்கள் மீட்பு

(வவுனியா).

வவுனியா கோழியாகுளப் பகுதியில் விடுதலைப புலிகள் சிறிலங்கா இராணுவததினர் மீது நடாத்திய தாக்குதலில் பதினெட்டு இராணுவத்தினரின் சடலங்களும், பெருமளவு நவீன ரக ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு;

★ மினிமி எல்.எம்.ஜி - 03
★ மேலதிக சுடுகுழல் - 01
★ ஜி. பி எம். ஜி - 01
★ மேலதிக சுடுகுழல் - 01
★ லிங் (ரவையுடன்) - 366

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வேலணை ப. நோ. கூ. சங்க 13ஆம்கிளையில் கொள்ளை

(மண்டைதீவு)

தீவுப்பகுதியில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்துள்ள சூழ்நிலையில் வேலணை ப. நோ. கூட்டுறவுச் சங்க 13ஆம் கிளை கதவு உடைத்துக் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகவும் அந்தநேரம் 38 ஆம் கட்ட உலர் உணவு விநியோகத்திற்காக வைக்கப்பட்டிருந்த ஓர் இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்களும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகவும் சங்க பொதுமுகாமையாளர் செல்லத்துரை அவர்கள் தெரிவிததுள்ளார்.

மேலும் 37ஆம் கட்ட உலர் உணவு விநியோகம் ஊழியர்களின் கடின முயற்சியாலும் (4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### 2 ஆம் லெப். விளிஸ்றன்

(வவுனியா)

வவுனியா கோழியா குளப் பகுதியில் நேற்று இடம்பெற்ற மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் இரண்டாவது லெப். விளிஸ்றன் (திருக்கேதீஸ்வரம், மன்னார்) வீரமரணமடைந்தார்.

இவருக்குப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## 'தமிழரின் தாகம்' அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

பிரபல கவிஞரும், தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க முக்கியஸ்தருமான கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன் அவர்களால் படைக்கப்பட்ட "தமிழரின் தாகம்' கவிதை நூல் அறிமுகம் இன்று நெல்லியடி மத்திய மகாவித்தியாலய (மகளிர் பிரிவு) மண்டபத்தில் (4 ஆம் பக்கம் பார்க்க)

## காட்டிற்குள் நுழைந்த இராணுவம் புலிகள் மோதல்

(திருக்கோணமலை)

கடவாணைக் காட்டுப் பகுதியிலிருந்த விடுதலைப் புலிகள் முகாம் ஒன்றை நோக்கி முன்னேறிக்கொண்டிருந்த இராணுவத்தினர் மிதிவெடிகளில் சிக்கிக்கொண்டனர். அதன்பின்னரும்முன்னேறிய இராணுவத்தினர்மீது 15 நிமிட நேரம் விடுதலைப் புலிகள் தாக்குதல் தொடுத்துள்ளனர். நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சண்டையின்போது இராணுவம் நான்கு ஹெலிகொப்டர்களைப் பயன்படுத்தியுள்ளது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதிநிதித்துவப்படாத நாடுகளின் ஸ்தாபனம் ஹேக் நகரில் ஆரம்பம்

(ஹேக்)

பிரதிநிதித்துவப்படாத நாடுகள்மற்றும்மக்களவைப்புகளின் ஸ்தாபனம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது ஐக்கியநாடுகள் ஸ்தாபனததுக்கு மாற்றாக அமையும்.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் பிரதிநிதித்துவம் பெறாத சிறுபான்மை இனங்கள் ஆக்கிரமிப்புக்குள்ளான பிரதேசங்களின்பிரதிநிதிகள் இவ்வமைப்பில் இடம்பெறுகின்றனர் யு. என். பி ஒ (UNPO) என்று அழைக்கப்படும் இந்த ஸ்தாபனததின் பட்டயம் பெப்ரவரி 28 ஆம் திகதி ஹேக் நகர் சமாதான மாளிகையில் கைச்சாத்தாகியது. பதினைந்து நாடுகளின் பிரதிநிகள் யு என. பி ஒ காலகோள் மாநாட்டில் கலந்துகொண்டார்கள்.

மக்களைப் பிரதிநிதித்துவப் (4 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

**தேவை**

வேப்பம் பூ தேவை. மில்க் வைற்-யாழ்ப்பாணம்.(B/2466)

**சனி நீராடு**

ஒலிவ் ஸ்நானப்பவுடர் பாவித்து வாராவாரம் எண்ணெய் முழுகி வர கண்,சிரசு, உடலுக்குக் குளிர்ச்சியைத்தருகிறது சுகவாழ்வு கிட்டுகிறது. பைக்கற் ஒன்று ரூபா.1-50பட்டுமே மில்க்வைற்-யாழ்ப்பாணம். (B/2452)

**நீம் தூபம்**

இயற்கை வளங்கொண்டு முநதையோர் கண்ட முறையில தயாரிக்கப்படுவது. நறுமணம் கமழும் நீம் தூபம் சுகவாழ்வுக்கு உதவுகிறது.பைக்கற் ஒன்று ரூபா.1.50 மில்க் வைற்,யாழ்ப்பாணம். (B/2471)

**தவறிவிட்டது**

திருநவுக்கரசு-மோகனதாஸ்ஆகியஎனது 683470368V இலக்கத்தையுடைய அடையாள அட்டை சாவகச்சேரி தபால் நிலையத்திற்கு முன்னால் தவறிவிட்டது. இதைக் கண்டெடுததவர்கள் தயவு செய்து ஒப்படைக்கவும் விக்கினேஸ்வரன் ஜுவலரீஸ் கண்டி வீதி,சாவகச்சேரி. தகுந்த சன்மானம்வழங்கப்படும்.(K/1373

## தொலைக்கல்வி பயிற்சிநெறி

(பளை)

கிளிநொச்சி மாவட்ட பளை கொத்தணிப் பகுதிக்கான பயிலுநர் ஆசிரியருக்கான தொலைக் கல்விப்பயிற்சிநெறி 20, 21 ஆம் திகதிகளில் பளை மகாவித்தியாலயத்தில் ஆரம்பமாகியுளளது. பயிற்சிநெறி ஆரம்ப வைபவத்தின்போது கல்வி அதிகாரி திரு பொன் சபாபதி கலந்துகொண்டார் பயிற்சிப் போதனா ஆசிரியர்களாக திரு சி. இராமலிங்கமும், திரு. எஸ். மரியதாஸும் கற்பிக்கின்றனர். பயிலுநர் ஆசிரியருக்கான கைநூல்களும் வழங்கப்பட்டுள்ளன.

## விசேட பொலிஸ் பிரிவு

(கொழும்பு)

சிறிலங்கா தபால்தொலைத் தொடர்புகள் அமைச்சு அனுமதியற்ற வகையில் தொலைத் தொடர்பு,ரெலெக்ஸ் சேவைகளைக்கண்டு பிடித்து நடவடிக்கையெடுக்க விசேட பொலிஸ் பிரிவொன்றை அமைத்து உள்ளது சட்ட விரோதமான முறையில் நடத்தப்படும் இத்தகையநிறுவனங்களின் தொடர்புகள் அனைத்தும் துண்டிக்கப்படவுள்ளன.

### குற்றங்கள் எமதே

எங்கள் நெஞ்சினில்
ஊறிப் போனது
அன்னிய நண்பரில்
குறைகள் காண்பது

எங்களை அவர்கள்
ஏமாற்றி விட்டார்
ஏமாந்து போனது
எங்களின் குற்றம்

எங்களை அவர்கள்
அடக்கி ஒடுக்கிறார்
அடிமையாய் வாழ்வது
எங்களின் குற்றம்

எங்கள் நிலங்களில்
சிங்களக் குடியேற்றம்
ஆண்டிட விடுவது
எங்களின் குற்றம்

எங்களை அவர்கள்
கொன்று குவிக்கிறார்
எம்மைக் காப்பது
எங்களின் கடமை

— பைப்

# 500 வருடங்கள் அடக்கப்பட்ட தமிழினம் 19 வருடங்களாகப் போராடுகின்றது

## - நளாயினி

(வவுனியா)

தலைவர் பிரபாகரனின் தலைமையில் இன்று நாம் எழுச்சியடைந்து எமக்கெதிராக இடம் பெறும் ஒடுக்குமுறையையும், அடக்குமுறையையும் உலகத்திற்கு வெளிப்படுத்தும் தினமாக இந்த மே தினம் அமைந்துள்ளது.

முதலாம் திகதி வவுனியா மாவட்டத்தில் உள்ளஓமந்தை பாடசாலை மைதானத்தில் இடம் பெற்றமே தினக் கூட்டத்தில் தலைமை வகித்து உரையாற்றும் போது, விடுதலைபபுலிகள் மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு.ஞானம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுமபோது, இன்றைய காலகட்டத்தில் அரசாங்கமும் முதலாளித்துவமும் மக்களை நசுக்கிவருகின்றன. எம மக்கள்மீது நடாத்தப்படும் கொடுமைகளை சித்திரிக்குமுகமாகவும், எமது போராட்டத்தின் வளர்ச்சியை எடுத்துக் காட்டும்முகமாகவும் இநத மே தினம் தமிழீழத்தில் கொண்டாடப்படுகறது

இந்தத் துயரம் நிறைந்த காலத்தில் இத்தினம் மிகப் பெரியளவில் கொண்டாடப் படுவதையிட்டு நாம் சந்தோஷப்படுகிறோம் என்றார்.

வவுனியா மாவட்ட விடுதலைப் புலிகளின் மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி நளாயினி அங்குபேசும் போது சுமார் ஐநூறு ஆண்டுகளாக எம்மினம் ஆதிக்கவர்க்கத்தால் அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, சுரண்டப்பட்டு வருகிறது. ஆனால், இவற்றிற்கு எதிரான போராட்டம் 19 ஆண்டுகளாகவே தலைவர் பிரபாகரனின் தலைமையில் நடாத்தப்பட்டுவருகிறது.

தமிழீழத்தில் ஆண்களை விட பெண்களின் தொகை அதிகம். பெண்களாகிய நாம் தேசிய விடுதலைப் போராட்டத்துடன் பெண்ணுரிமைப் போராட்டத்தையும் முன்னெடுக்க வேண்டிய நிலையில் உள்ளோம என்றார்.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்ட கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் திரு. ராம் அங்கு உரையாற்றும் போது, தமிழீழத்தில் 35 ஆயிரம் மக்கள் உயிரிழந்துள்ளனர். ஆயிரக்கணக்கான யுவதிகள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இவ்வாறன கொடுமைகளுக்கு மத்தியில் எமக்கெதிரான அடிமை விலங்கை உடைதடெறியவே நாம் போராடுகிறோம்,

அடக்கப்படும்போது, கிளர்ந்தெழுந்து போராடுவது உலகம முழுவதும் நடைபெறுகிறது. இன்றைய நிலையில் மக்கள் மனப்பூர்வமாக எமது போராட்டத்தில் பங்குபற்ற வேண்டும் என்று குறிப்பிட்டார்.

வவுனியா தெற்கு தமிழ்ப் பகுதி உதவி அரசாங்க அதிபர் பிரிவு வட்ட அவைத் தலைவர் திரு. க சிவசுப்பிரமணியம் அங்கு பேசும் போது, ஆட்சியாளர்களினால் ஆயுத முனையில நாம் அடக்கப்பட்ட காரணத்தினாலேயே நாம் ஆயுதம் ஏந்தி அவர்களுக்கெதிராகப் போராட வேண்டிய நிலை ஏற்பட்டது.

எமது பாரம்பரிய மண்ணைத்தான்நாம்கேட்கிறோம், இதைப் பெறுவதற்காகவே நம் போராடிக்கொண்டிருக்கிறோம். ஒடுக்கப்பட்டவர்கள் எக்காலமும்ஒடுக்கப்பட்டிருக்க மாட்டார்கள். உரிமைகேட்டு போராடுவார்கள் வெற்றி பெறுவார்கள் என்று உலகத்திற்கு வெளிப்படுத்திய தினமே இந்த மே தினம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

பன்றிக்கெய்தகுளம்சந்தியில் ஆரம்பமான மேதினப் பேரணியில் பொதுமக்களினால் தமிழீழத்தில் இடம்பெறும் அரச படையினதும், அரசினதும் அட்டூழியங்களை வெளிப்படுத்தும் ஊர்திகளும், சுலோக அட்டைகளும் ஊர்வலமாகக்கொண்டு வரப்பட்டன. (தி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### விவசாயபீடம் கிளிநொச்சி

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு 1991-06-10 ஆம் தேதி வரை விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

விவசாயப் பொறியியல்/ பயிராக்கவியலில்

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I. / சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II.

சம்பள அளவுத்திட்டம்.

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I. - ரூபா 9,600 - 8x250 - 11,600/- மாத மொன்றுக்கு.

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II. - ரூபா 8 000 - 5x250 - 9,250/- மாதமொன்றுக்கு

மேற்குறித்த, பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்களும் விபரங்களும் இப் பல்கலைக் கழகத்தின சிரேஷ்ட உதவிப் பதிவளர் (தாபனங்கள்) அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களைத் தபாலில்பெற விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுயமுகவரியிட்டு 23x10 ச. மீ. அளவுடைய தபாலுறை அனுப்பப்படல் வேண்டும்.

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத் திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப் படுவார்.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1991-05-02

(B/ 2472)

### உலகின் மிகச் சிறிய பாடும் பறவை

கியூபாவின் முதலைகள் நிறைந்த வளைகுடா ஒன்றினருகே உலகின் மிகச் சிறிய பறவையாகிய ''பாடும்பறவைகள்' (humming birds கண்டு பிடிக்கப் பட்டுள்ளது. இதனுடைய நிறை 2 கிராம்கள் மட்டுமே. இவற்றின் கூடுகள் ஒரு அங்குல விட்டமுள்ள சிறிய உருண்டை வடிவில் காணப்படுகின்றன. இவற்றின் முட்டைகள் ஒருகோப்பிக் கொட்டையின் அளவினதாகும். எனினும் இவை தமது நிறையைப் போல மூன்று நான்கு மடங்கு நிறையுள்ள உணவை உட்கொள்ளும். பிரதான உணவாக சிறிய பூக்களிலுள்ள தேனை இவை உட்கொள்கின்றன.


## A/L 91 DAY CLASS

| | | | |
|---|---|---|---|
| 8-30 | CHE. | - | திரு. சிவசோதி |
| 9-30 | PHY. | - | திரு. யோகநாதன் |
| 10-30 | PURE. | - | திரு. குணசிங்கம் |
| 10-30 | ZOO. | - | திரு. தேவா |
| 11-30 | APP. | - | திரு. குணசிங்கம் |
| 11-30 | BOT. | - | திரு. சதீஸ் |

ஆரம்பம்: 08. 05. 1991

BOND கல்வி நிறுவனம்
58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(B-2473)

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திரு. சுப்பிரமணியம் சத்தியசீலன்

தோற்றம்: 02 - 06 - 1966 மறைவு: 17 - 04 - 1990

திதி: 06 - 05 - 1991

மலரக் காத்திருந்தோம் செல்வமே
புலரும் போதினிலே உலர்ந்தாய்
பெருகும் துயருக்கு விடை இங்கு இல்லை
உருகும் நெஞ்சத்தில் ஒரு கோடி
புயல் தந்து வீழ்ந்தாய்.

நெஞ்சில் சுமை ஏற்று நினைவுகளின் நிம்மதியை நாம் இழந்து நிற்கின்றோம் செல்வமே "சத்தி" எங்கே நீயும் சென்றாயோ.

2, 6ஆம் யூனிற்,
இராமநாதபுரம். (R - 1372)

தாய், சகோதரர்கள், அத்தான்மார்,
அண்ணி, மருமக்கள், மகன்மார்.

### சிந்தனைக்கு

அறத்தினை நெறிமுறையாக கடைப்பிடிக்காமல், இலட்சியமாக மட்டும் போற்றுபவன் கபடவேடதாரி.

— ஆஸ்டின் ஓ மேலி

ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 06-05-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண்: 05

# உள்நோக்கமுள்ள செயல் உணர வேண்டும் உலகம்

வவுனியா சாஸ்திரி கூழாங்குளம் பகுதியில் பிரான்ஸ் தேச வைத்திய குழு மீது சிறிலங்கா விமானப்படை விமானங்களும், ஹெலிகொப்டர்களும் தாக்குதலை மேற்கொண்டதில் அவ்வாகனத்தில் பயணம் செய்த நான்கு பேர் காயமடைந்துள்ளனர். வாகனம் சேதமடைந்தது.

இவ் வைத்தியக் குழுவினர் வவுனியாப் பிரதேசத்திற்குள் தாம் பயணம் மேற்கொள்வதற்கு சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சிடம் அனுமதி பெற்றதாகவும் தமது வாகனம் தாக்குதலுக்கு உள்ளானபோது அதில் பெரிய அளவில் செஞ்சிலுவைச் சங்கக்கொடி பறந்து கொண்டிருந்ததாகவும் தெரிவித்துள்ளனர். மேலும் தாம் பிரயாணம் செய்துகொண்டிருக்கும்போது தமது வாகனத்திற்கு அண்மையாக வேறு எந்த வாகனமும் வரவில்லை எனவும், அத்தோடு தரையில் இருந்து தாக்குதல் எதுவும் நடைபெற்றதாக தமக்குத் தெரியவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

சிறிலங்கா அரசாங்கத்தின் இத் தாக்குதல்கள் தவறுதலானவையல்ல. திட்டமிட்ட நடவடிக்கையாகும். சர்வதேச நிவாரணக் குழுக்களை நாட்டை விட்டு வெளியேற்றும் முயற்சியாகும் இதன்மூலம் இலங்கையில் நடக்கும் இனப்படுகொலையை உலகத்தின் கண்ணில் இருந்து மறைத்துவிட சிறிலங்கா அரசாங்கம் எண்ணுகின்றது.

சர்வதேச நிவாரணக் குழுக்கள் மீது சிறிலங்கா இராணுவம் தாக்குதல் நடத்தியது இது முதல் தடவையல்ல கடந்த வருடம் யுத்தம் ஆரம்பித்த பின்னர் பலாலியிலும், வேறு இடங்களிலும் பல தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. மடுவில் நிவாரணப் பொருள்களை ஏற்றிச் சென்ற ஐ நா. அகதிகள் பராமரிப்பு பிரிவினரின் லொறிகள் மீது ஹெலிகொப்டர்கள் தாக்குதலை நடத்தின. கடந்த வாரம் தாண்டிக்குளம் தடைமுகாமில் வைத்தும் ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலய லொறி மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதேபோன்று அப்பாவித் தமிழர்கள் மீதும், சிறிலங்கா 'அரச விருந்தாளிகள்' மீதும் சிறிலங்கா ஆயுதப்படையினர் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர். இத்தாக்குதல்கள் சித்த சுவாதீனம் அற்றவர்களாலும், சூரியனின் உஷ்ணத்தாலும் ஏற்பட்டவை எனவும் விளக்கங்கள் அளிக்கப்பட்டதும் உண்டு.

சிறிலங்கா ஆயுதப்படையினர் இவ்வாறான தாக்குதல்களை நடத்திவிட்டு விடுதலைப் புலிகள் மீது குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவதும் வழமையாகும். ஆனால் இவற்றில் பெரும்பாலானவை தாக்குதலுக்கு உள்ளாகும் நிறுவனங்களினாலும், தாக்குதலுக்கு உள்ளானவர்களினாலும் மறுக்கப்படுவதுண்டு. அத்தோடு சில தாக்குதல் குற்றச்சாட்டுக்களை புலிகள் மீது சுமத்தமுடியாமல் போய் விடுவதும் உண்டு. ஏனெனில் விமானத் தாக்குதல் மேற்கொள்ள விமானங்களோ, ஹெலிகொப்டர்களோ புலிகளிடம் இல்லை என்பது சகலருக்கும் தெரிந்த விடயம் என்பதனால் ஆகும்.

அதேவேளை சர்வதேச நிவாரணக்குழுக்கள் தாக்குதலுக்கு உள்ளாகிய சகல சம்பவங்களும் அவர்கள் சட்டப்படி அனுமதி பெற்றுச் சென்ற போதே நிகழ்ந்துள்ளன. இதிலிருந்து சிறிலங்கா அரசாங்கத்தின் வாக்குறுதிகளும் சட்டங்களும் எந்தளவிற்கு நம்பிக்கைத் தன்மை உடையவை என்பதை சர்வதேச சமூகத்தினர் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். இதனைக் கொண்டே சிறிலங்கா அரசாங்கத்தினர் மீது எவ்வாறு தமிழர் நம்பிக்கை வைக்க முடியும் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இன்று சர்வதேச சமூகத்தினருக்கு நடந்தது போன்றே அன்று தமிழ் மிதவாதத் தலைவர்களும் சிறிலங்கா அரசாங்கத்தினால் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டார்கள். அன்று மிதவாதத் தலைவர்கள் எவ்வளவோ விட்டுக் கொடுப்புக்களுடன் தமிழர் பிரச்சினைகளைத் தீர்க்க முன்வந்தார்கள். இருந்தும் அவர்கள் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டுக் கொண்டே வந்தார்கள்,

இந்நிலையிலே இன்று தமிழர் தேசிய பிரச்சினை ஆயுதப் போராட்டமாக உருவாகி வளர்ந்துள்ளது. இந்நிலையில் தமிழர் சிறிலங்கா அரசாங்கத்திடம் என்ன நம்பிக்கையின் அடிப்படையில், ஆயுதங்களைக் கீழே வைத்துப் பேச்சுவார்த்தையை நடத்த முடியும் என்பதை சர்வதேச சமூகத்தினர் சிந்திக்க வேண்டும்.

## சீக்கிய தீவிரவாதிகளுடன் நான் பேசியதில்லை

### - சந்திரசேகர்

(டில்லி)

சீக்கிய தீவிரவாதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவில்லையென இந்தியப் பிரதமமந்தரி சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் புதுடில்லியில் போராளிகளுடன் தாம் பேச்சுவார்த்தை நடத்துவதாக கூறும் செய்திக்கு மறுப்புத் தெரிவித்த திரு. சந்திரசேகர், இங்குள்ள போராளிகள் வன்முறைகளை கைவிட்டு சமாதானத்திற்கு வரும்படி அழைத்தேனே தவிர அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவில்லை என்றும் தெரிவித்தார்.

இதேநேரம் சீக்கியத் தலைவர்களுடன் தாம் பேசியதாக அவர் தெரிவித்தார்.

## சீக்கிய தீவிரவாதிகளுடன் சந்திரசேகர் பேச்சு

(டில்லி)

இந்திய அரசியல் சாசனத்தின் வரம்பிற்குள் பஞ்சாப் போராளிகளுடன் இந்தியப்பிரதமர் எஸ்-சந்திரசேகர் பேச்சுவார்த்தை நடத்துகிறார் என பிரதமமந்திரியின் அலுவலக இணைஅமைச்சர்கபல்மொராக்கா தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் செய்தியாளர்கள்மத்தியல் பேசிய இவர் சந்திரசேகர் பஞ்சாப்போராளிகளுடன் பேச்சு வார்த்தை நடத்துகிறார் என்பதை உறுதிப்படுத்தினார்.

## அணு ஆயுதங்கள் மீது சர்வதேசக் கண்காணிப்பு

(லண்டன்)

உலக நாடுகள் எல்லாவற்றிலும் உள்ள அணு ஆயுதங்களை சர்வதேச கண்காணிப்பிற்கு உள்ளாக்க வேண்டும் என உலகெங்கிலும் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் கேட்டுள்ளார்கள்.

நேற்று முன்தினம், பியாங்யாங்கில் முடிவடைந்த சர்வதேச பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைப்பின் ஆண்டுக் கூட்டத்தில் இது குறித்த தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

## தமிழகத்தில் 4கோடி மக்கள் வாக்களிக்கின்றனர்

(சென்னை)

தமிழகத்தில் நடைபெறவிருக்கும் சட்டப்பேரவை மற்றும லோக்சபாத் தேர்தல்களில் நான்கு கோடி மக்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இருநூற்றிமுப்பத்திநான்கு சட்டப்பேரவை இடங்களுக்கும் முப்பத்தொன்பது லோக்சபா இடங்களுக்கும் முறையே 2 834, 461 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றார்கள்.

அண்ணளவாக 1748 சுயேச்சை வேட்பாளர்கள் இத்தேர்தலில் போட்டியிடுவதாகவும், அரசியல் கட்சிகளில் பாட்டாளி மக்கள் கட்சிதான் சட்டப்பேரவை மற்றும் லோக்சபைத்தேர்தலில் அதிகம் பேரை நிறுத்தியுள்ளது.

## தொழிற்சாலையில் வெடிப்பு மக்கள் வெளியேற்றம்

(மெக்சிக்கோ)

மெச்சிக்கோவில், இரசாயன தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட வெடிப்புக்கள் காரணமாக நூற்றுக்கணக்கான மக்கள் அவ்விடத்தில் இருந்து இடம் பெயர்ந்துள்ளனர்.

வெராக்குறூஸ்மாநிலத்தில் அமைந்துள்ளஇந்தத் தொழிற்சாலையில் அடுத்தடுத்து ஏற்பட்ட வெடிப்புக்களால் அங்கிருந்து வெளியேறும் விஷவாயுக்களினால் மககள் பாதிக்கப்படுவதை தடுப்பதற்கே அவர்கள் அங்கிருநது அகற்றப்பட்டனர்.

## மாணவர்மீது பொலிசார் தென் கொரியாவில் சூடு

(சியோல்)

தென் கொரியாவில் மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்த பேரணி ஒன்றை நோக்கி பொலிசார் சுட்டதில் இருபது மாணவர்கள் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் சோலில் பேரணி ஒன்றை நடத்திய மாணவர்களை நோக்கி பொலிசார் சுட்டதில் இருபது மாணவர்கள் காயமடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

## இலங்கையில் மொத்தம் 10,000 பாடசாலைகள்

(கண்டி)

இலங்கை முழுவதும் ஆயிரத்து அறுநூறு மாணவர்களுக்கு ஒரு பாடசாலை வீதம் பத்தாயிரம் பாடசாலைகள் உள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மொத்தச் சனத்தொகையில் 25 சதவீதத்தினர் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களாக உள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் கண்டியில் சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா கலந்து கொண்ட நிகழ்ச்சியில் வாசிக்கப்பட்ட அறிக்கையொன்றில் இந்தப் புள்ளி விபரம் அறிவிக்கப்பட்டது.

ஆண்டு ஐந்து புலமைப் பரிசில் எழுததுப் பரீட்சைக்கு தேர்ந்தெடுக்கபபடும் மாணவர்களின் தொகை ஐயாயிரத்திலிருந்து இருபத்தையாயிரமாக உயர்த்தப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு முடிவடைவதற்குள் மாவட்டம் தோறும் ஒன்பது பல்கலைக்கழக கல்லூரிகள் நிறுவப்படும் என்றும் அடுத்த நான்கு ஆண்டுகளில் ஒவ்வொரு மாவட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் பல்கலைக்கழக கல்லூரி கட்டப்படும் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மொழிப்பிரச்சினையை தீர்க்காததனாலேயே இன்று புலிப் பிரச்சினை

### - பிரேமதாசா

(மாத்தளை)

''பதவிப் பேராசை காரணமாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் மொழிப் பிரச்சினையை தீர்க்காததாலேயே புலிப் பிரச்சினை உருவானது'' என்று சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா கூறியுள்ளார்.

மொழிப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டது போல் புலிப் பிரச்சினைக்கும் விரைவில் தீர்வு காண்பேன் என்று மாத்தளையில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரசாரத்தில் தெரிவித்தார்.

## 15 இலட்சம் டொலர் உதவி

(லண்டன்)

புயலினால் பாதிக்கப்பட்ட பங்களாதேஷிற்கு நிவாரண உதவிகளுக்காக ஐ நா குழந்தைகள் நிதியம் பதினைந்து இலட்சம் டொலர்களை வழங்கியுள்ளது என்று அந் நிறுவனத்தின் உறுப்பினர் தெரிவித்தார்.

## படகு விபத்தில் 3 பேர் பலி

(ஹைதராபாத்)

ஆந்திரப் பிரதேசத்தில் நடந்த படகு விபத்தொன்றில் மூன்று பேர் உயிர் இழந்துள்ளனர். 67 பேர் காணாமல் போயுள்ளனர்.

நேற்று கோதாவரி ஆற்றில் இடம் பெற்ற படகு விபத்தொன்றில் அதில் சென்று கொண்டிருந்த எழுபது பேர்களில் மூவர் உயிர் இழந்ததாகவும்67பேரைக் காணவில்லை என்றும் மாநில அரசு தெரிவித்துள்ளது.

## இயங்காத நிலையில் நூலகம்

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்த தெல்லிப்பளை நூலகம் இயங்காத நிலையில இருந்து வருவதாக அந்த நூலக அங்கத்தவர்கள் முறைப்பாடுகள் செய்துள்ளனர்.

இந்த நூலகம் பலாலி இராணுவ முகாம் இராணுவத்தினரின கடுமையான ஷெல் தாக்குதலைத் தொடர்ந்து மல்லாகம் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டது. (லோ)

## பெற்றுக்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

புகைப்பட அல்பம் ஒன்று மருதனா மடம் சந்திக்கும் உரும்பராய் சந்திக்கும் இடையில் நீர்வேலியைச் சேர்ந்த இளையதம்பி கந்தசாமி என்பவரால் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்

## வீடுகள், கடைகள் சேதம்

வவுனியா சாஸ்திரி கூழாங்குளம் சந்திப் பகுதியில் கடந்த மூன்றாம் திகதி சிறிலங்கா விமானப்படையின் குண்டு வீச்சினால் பல கடைகளும் வீடுகளும் சேதமுற்றன.

பிரான்சிய வைத்தியர் குழு வாகனத்தின் மீது நடத்தப்பட்ட குண்டு வீச்சு சம்பவத்தின் போது இரு பொம்மர்கள் பன்னிரண்டு தடவைகள் குண்டு வீசித் தாக்கிய சமயம் சிவபாதசுந்தரம் என்பவரின் வீடும் லெட்சுமி என்பவரின் பலசரக்குக் கடையும் முற்றாகச் சேதமடைந்தன. (தி)

# பிரதமரை பதவி விலகக் கோரி சியோலில் மாணவர் ஆர்ப்பாட்டம்

(சியோல்)

தென்கொரியத் தலைநகர் சியோலில் நேற்றும் தொடர்ந்து பத்துமணி நேரமாக மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆண்டு சியோலில் இடம் பெற்ற மிகமோசமான ஆர்ப்பாட்டமிது என வர்ணிக்கப் படுகிறது. தென் கொரிய ஜனாதிபதி டோக் டேக் கூ இராஜினாமா செய்யவேண்டும் என ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமிட்டனர். தென் கொரிய அரசுக்கெதிரான ஆர்ப்பாட்டங்கள் இரண்டு நாட்களுக்கு முன்னதாகத் தொடங்கின. பல்கலைக்கழக மாணவரொருவர் பொலிஸாரால் அடித்துக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து ஆர்ப்பாட்ட சூழல் தோன்றியது. தலைநகரிலுள்ள ரயில் நிலையத்தில் பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியதில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் பாதிக்கப்பட்டனர். நேற்றைய ஆர்ப்பாட்டங்களில் சுமார் முப்பதாயிரம் பேர் வரையில் கலந்து கொண்டனர். அமைச்சரவையும், சாதாரண உடையில் நடமாடும் பொலிஸ்படையும் கலைக்கப்பட வேண்டுமென ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமெழுப்பினர்.

## இந்திய-பாக். எல்லையில் பீரங்கித் தாக்குதல்

(புதுடில்லி)

பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையே எல்லையோரக் காவல் நிலைகளில் குண்டுத் தாக்குதல்களும் துப்பாக்கிப் பிரயோகங்களும் கடந்த சில நாட்களாக இடம் பெற்று வருவதாகத் தெரிய வருகிறது. இத் தாக்குதல்களில் இந்திய தரப்பில் ஐந்து இராணுவத்தினர் காயமடைந்திருப்பதாக புதுடில்லியில் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## கூட்டுறவு ஊழியர்களுக்கு 300 ரூபா சம்பள உயர்வு

(கொழும்பு)

கூட்டுறவுத்துறை ஊழியர்களுக்கு மாதாந்தம் ரூபா 300 சம்பள உயர்வு வழங்கப்பட்டிருப்பதாக சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா அறிவித்துள்ளார். மே மாதம் முதல் திகதியிலிருந்து இச் சம்பள அதிகரிப்பு அமுலுக்கு வரவுள்ளது கூட்டுறவுத்துறை ஊழியர்களின் குறைந்த பட்ச சம்பளம் ரூபா இரண்டாயிரமாக அதிகரிக்க ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ஊழியர் ஓய்வூதியத் திட்டமொன்றைத் தயாரிக்கவும், மருத்துவ காப்புறுதித் திட்டமொன்றை அறிமுகப்படுத்தவும் ஊக்குவிப்பு அலவன்ஸை வழங்கவும் நடவடிக்கை எடுப்பதற்கும் உத்தரவிட்டிருப்பதாக அவர்மேலும் கூறியுள்ளார்

நேற்றைய தினம் கொழும்பு கெத்தாராம விளையாட்டு மைதானத்தில் சுமார் நாற்பதாயிரத்துக்குமதிகமான கூட்டுறவு ஊழியர்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சியிலேயே சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா மேற்கண்ட தகவல்களை வெளியிட்டார்.

## உலகில் வறுமையான நாட்டில் தேர்தல்

(கிளிபிசோ)

மேற்கு ஆபிரிக்காவிலுள்ள கிளிபிசோ நாட்டில் பதினேழு ஆண்டுகால இடதுசாரி ஆட்சிக்குப் பிறகு பல கட்சிகள் கலந்து கொள்ளும் தேர்தலுக்கு வழிசமைக்கும் விதமாக அரசியலமைப்பைத் திருத்தப்போவதாக அரசு அறிவித்துள்ளது ஆளும் கட்சிக்கு அதிகாரமளிக்க உத்தரவாதமளிப்பதை நாடாளுமன்றம் நேற்று ரத்துச் செய்தது. 1974 ஆம் ஆண்டில் இடதுசாரிகள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பாகபதினொரு ஆண்டுகள் போர்த்துக்கேய காலனியிலிருந்து விடுபட கிளிபிசோ நாடு போராடியது கிளிபிசோ மேற்கு ஆபிரிக்காவில் செனகலுக்கும், கென்யாவுக்கும் இடையே அமைந்துள்ளது. உலகிலேயே மிக ஏழ்மையான நாடான கிளிபிசோவில் தனிநபர் வருமானம் சுமார் இருபது டாலர்களுக்கும் குறைவானதாகும்.

பங்களாதேஷ் அரசாங்கம்

## நிவாரணம் அளிக்கவில்லை; எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

(டாக்கா)

புயலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் போதுமான நிவாரண உதவியளிக்க அரசாங்கம் தவறிவிட்டதாக பங்களாதேஷ் எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன நிலைமையைச் சமாளிக்க அனைத்துக்கட்சிகளின் ஆலோசனைக் கமிட்டியொன்றை அமைக்கும்படியும் எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்தன.

இப்பிரச்சினைபற்றிபாராளுமன்றத்தில் விவாதிக்க துணை சபாநாயகர் அனுமதி மறுத்ததைத்தொடர்ந்து எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்திலிருந்து வெளிநடப்புச்செய்தன.

## இளைஞர் கைது

வந்தாறுமூலை சிறிலங்கா இராணுவத்துடன் வந்த ரெலோவினர் கழுவன்கேணி என்ற கடற்கரையோர கிராமத்தை சுற்றிவளைத்தனர். தொடர்ந்து அக்கிராமத்திலிருந்த கிருஷ்ணகுமார் என்ற இருபத்திரெண்டு வயது இளைஞரை கைதுசெய்து தமது முகாமுக்கு கொண்டு சென்றுவிட்டனர்.

இச் சம்பவம் கடந்த மூன்றாம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்தில்இடம்பெற்றது.

## இரு வேறு விபத்துக்களில் ஐவர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வைத்தியசாலையின் முன்னால் நேற்று மாலை ஏழு முப்பது மணியளவில் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் நால்வர் படுகாயமுற்றனர். ஒருவரின்நிலை கவலைக்கிடமாகியுள்ளது. வி. பராசக்தி, எஸ் சசிகலா, எஸ்.மலைவாணன் ஆகிய இம் மூவரும் மோட்டார் சைக்கிளில் வந்த அல்லைப்பிட்டி வாசிகளாவர். இந்த மோட்டார் சைக்கிளில் சிக்கிய அடுத்தவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதுடன், இவரது பெயர் விபரமும் கிடைக்கவில்லை.

இதே இடத்தில் நேற்றுக் காலை ஒரு சிறுமி வாகனம் ஒன்றுடன் மோதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (லோ

## கிரண்பேடிக்கு விருது

(புதுடில்லி)

போதைப்பொருள்கள் கடத்தலையும், உபயோகத்தையும் தடுப்பதற்காக சிறப்பான பங்குப் பணியாற்றியமைக்காக மூத்த ஐ பி. எஸ் அதிகாரியான திருமதி கிரண்பேடி ஆசியப் பிராந்திய விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளார்.

## தமிழ்நாட்டிற்கு 30 மத்திய காவற்படையணி

(சென்னை)

வரவிருக்கும் சட்டமன்ற மற்றும் லோக்சபாத் தேர்தல்களின் போது ஏற்படக்கூடியதென எதிர்பார்க்கப்படும் வன்முறைகளைத் தடுக்க மத்திய காவல் படையிலிருந்து முப்பது அணியினர் தமிழ் நாட்டுக்கு வரவழைக்கப்படவுள்ளனர்.

## ஒய்வூதியக் கொடுப்பனவு

(மண்டைதீவு)

வேலணை ப.நோ. கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் ஒய்வூதியம் பெறுவர்களுக்கானமார்ச் மாத ஒய்வூதியக் கொடுப்பனவு நாளை செவ்வாய்க்கிழமையில் இருந்து காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள அவர்களது தற்காலிக அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும் என்று தலைவர் பொ. நடராசா அவர்கள் தெரிவித்தார்.

## அகதி முகாமில் கண்நோய்

(ஈச்சமோட்டை)

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் தங்கியுள்ளவர்களிடையே கண்நோய் பரவி வருவதாகத் தெரியவருகிறது. கண்நோயினால் அவதிப்படுபவர்களைக் கண்காணிக்க யாழ் மாநகர சுகாதார மருத்துவர்கள் செயற்பட்டு வருகின்றனர். இந்த முகாமில் நூறு குடும்பங்களைச் சேர்ந்த ஐநூறுபேர் தங்கியுள்ளனர். (43)

## வளைகுடாப் பாதுகாப்பு; அரபுக்கள் மாநாடு

(குவைத்)

வளைகுடாப்பகுதியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றி விவாதிக்க ஆறு வளைகுடா நாடுகளுடன் எகிப்து, சிரியா நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள்குவைத்தில் நேற்றுக்கூடியுள்ளனர். பிராந்திய ஒத்துழைப்புச் சபையின் உறுப்பினரல்லாத எகிப்து, சிரியா ஆகிய நாடுகளும் பங்கேற்கும். பாதுகாப்புப்படை அமைப்பது பற்றியும் இக்கூட்டம் ஆராயும். இதனிடையில் வளைகுடா நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களுடன் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் டிக் செனி பேச்சு நடாத்தவுள்ளார். அப்பகுதியில் நேசநாடுகளின் பாதுகாப்பு உதவி தேவைப்பட்டால் பிரிட்டன் தனது கடற்படை மற்றும் வசதிகளை அளிக்க முன்வரும் என்று ஜெட்டாவில்சவூதி மன்னரைச் சந்தித்த பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் கூறியுள்ளார்.

வேலணை

அவ்வப்பகுதி கிராம சேவகர்களின் ஒத்துழைப்பாலும் இன்று வரை பெருமபாலானமையான மக்களுக்கு வழங்கப்பட்டு விட்டதாகவும் அவர் தெரிவித்தார். (88)

பதினெட்டுச்

| | | |
|---|---|---|
| ★ எவ்.என்.சிரகத் துப்பாக்கி | - | 16 |
| ★ ரவைக்கூடு | - | 53 |
| ★ 60 எம்.எம் மோட் | - | 01 |
| ★ ஷெல் | - | 10 |
| ★ தொலைத்தொடர்புக் கருவி | - | 02 |
| ★ 5.56 ரவைகள் | - | 1600 |
| ★ தொலைக் காட்டி | - | 02 |
| ★ 40 எம் எம் ஷெல் | - | 06 |
| ★ நேட்டோரவைகள் | - | 366 |
| ★ கைக் குண்டுகள் | - | 04 |
| ★ குண்டு துளைக்க முடியாத கவசம் | - | 02 |

குறுகியகால

நொச்சி, முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களுக்கும் இரண்டாம் சட்ட வினாத்தாள்கள் கொண்டுபோய்ச் சேர்க்கப்பட்டதும் இந்த அறிவித்தல் வெளியிடப்படும் என்றும் ஆதார் வெகமல்ல தெரிவித்ததாகச் செய்திவெளியிடப்பட்டுள்ளது.

## ஜோர்ஜ்புஷ்ஷிற்கு இருதயநோய்

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் இருதய நோயினால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருப்பதாக வெள்ளைமாளிகை வட்டாரங்கள் கூறியுள்ளன.

வார இறுதியில் தேகாப்பியாசத்தில ஈடுபட்டிருந்த போது சுவாசிக்க கஷ்டப்பட்டதைத் தொடர்ந்தே அவர் மேரிலான்ட் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அமெரிக்க அதிபரின் தேகநிலை குறித்து கவலைப்பட எதுவுமில்லையென வைத்தியசாலை வட்டாரங்கள் கூறியுள்ளன.

## இருவருக்கு மரண தண்டனை

கோணலிங்கம் சசிகலா (18) பட்டித்திடல், மூதூர்) அந்தோனி கந்தசாமி (40) 58 ஆம் கட்டை, மூதூர் ஆகிய இருவருக்கு 58 ஆம் கட்டை மூதூர்ப்பகுதியில் வைத்து விடுதலைப்புலிகள் மரணதண்டனை வழங்கியுள்ளனர். காட்டிக் கொடுக்கும் சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டமைக்காக கடந்த புதனன்று இரவு ஒன்பது மணியளவில் இத்தண்டனை நிறைவேற்றப் பட்டுள்ளது.

தமிழரின்

இடம்பெறவுள்ளது. முறைசாராக் கல்விப்பிரிவு அதிகாரியான திரு ச. சுப்பிரமணியம் தலைமையில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் இந்த அறிமுக விழாவில் வடமராட்சிப் பிரிவு இணைப்பாளர் திரு. சூசை சிறப்புரையாற்றுவார். விழாவில் பல அறிஞர்கள் ஆய்வுரை வழங்கவுள்ளனர்.

இருபத்திரெண்டு

கொண்டிருக்கும் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருக்குத் துணையாக இரண்டு குண்டு வீச்சு விமானங்களும், இரண்டு அவ்ரோ விமானங்களும். இரண்டு ஹெலிகொப்டர்களும தாக்குதலை மேற்கொண்டவண்ணம் இருந்தன.

காலை நடந்த மோதலில் 20ற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப் பட்டுள்ளதாகவும், பலர் காயமடைந்துள்ளதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த மோதலில் இறந்த 18 இராணுவத்தினரின் சடலங்கள் புலிகளால் கைப்பற்றப் பட்டுள்ளன.

இந்தச் சண்டை தொடர்ச்சியாக மாலை இரண்டு மணியிலிருந்துநான்குமணிவரையும் இடையிடையே சிறுசிறு சண்டைகள் நடைபெற்றன.

நான்குமுப்பது மணியளவில் முன்பு சண்டை நடந்த இடத்தைநோக்கி இராணுவம் முன்னேற முற்பட்டபோது விடுதலைப்புலிகள் மீண்டும் தாக்குதல் நடாத்தினர் இந்தச்சண்டை மாலை ஆறுமணி வரை நீடித்தது இராணுவத்தினருக்கு உதவியாக மாலையும இரண்டு குண்டு வீச்சு விமானங்கள், 2 அவ்ரோ விமானங்கள் இரண்டு உலங்கு வானூர்திகள் எனபன இந்தச் சண்டையிலும் குண்டுவீசசுத் தாக்குதல நடாத்தின இத்தச் சண்டையிலும் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். இரண்டு இராணுவத்தினரின் சடலங்களும், ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப் பட்டன.

## மரண தண்டனை

(பருத்தித்துறை)

ஊழல மற்றும் முறைகேடானபாலியல்நடத்தைகள் போன்ற சமூகசீர்கேடான நடவடிக்கைகளில் ஈடுபட்ட விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார். இயக்க கட்டுப்பாட்டினை மீறிச் செயற்பட்ட வாசு (வேலாயுதம் விஜயகுமார் ஆத்திபடி பருத்தித்துறை) என்பவருக்கு நேற்று முன் தினம் புலிகளால் மரணதண்டனை வழங்கப்பட்டுள்ளது.

பிரதிநிதி

படாத அரசாங்கங்களின் பிரதிநிதிகளே ஐ. நா ஸ்தாபனத்தில் அங்கம வகிக்கிறார்கள். இதனால் ஐ. நா ஸ்தாபனம் பல வழிகளில அதன் கடமையிலிருந்து தவறிவிட்டது. ஐ. நா.சபைக்கு ஒரு மாற்றாகவே யு என்.பி. ஓவை நாம் அமைத்துள்ளோம் என்று அதன் தலைவர் லினாறட் மாள் தெரிவித்தார்.

லினாறட் மாள் எஸ்தோனிய நாட்டைச் சேர்ந்தவர். பதினைந்து பிரதிநிதிகள் கலந்துகொண்ட இந்த மாநாட்டில சோவியத்குடியரசுகளான லற்வியா, ஜோர்ஜியா, ஆர்மேனியா, வோல்கா, கிறிமியா, எஸ்தோனியா ஆகிய நாடுகளைச்சேர்ந்த ஆறு பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

ஒடுக்கப்பட்ட மக்களினது சுயநிர்ணய உரிமை, சிறுபான்மையினரின் நலன்கள், சுதந்திரம் வேண்டிப் போராடும் மக்களுக்கு உதவுதல் ஆகியன இந்த அமைப்பினது பட்டயத்தின் முக்கிய அம்சங்களாகும்.

காட்டிற்குள்

இவற்றில் இரண்டு ஹெலிக்கொப்டர்கள் சண்டை நடைபெற்ற பகுதியில் இறங்கிஏறியுள்ளன. கடவானைக் கடற் பகுதியிலிருந்தும் மங்கிபிறிட்ஜ் இராணுவமுகாம்பகுதியிலிருந்தும்ஷெல் தாக்குதலை நடத்திக்கொண்டுள்ளனர் சண்டை இடம்பெற்ற இடத்திலேயே இராணுவத்தினர் நிலைகொண்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்தில் உள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மே மாதம் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.